புலமைவளரி


இலக்கை நோக்கி


5

நேரம்:- 1மணித்தியாலம் **வளரி – 010** புள்ளி:-.....

பெயர்:-..... **வினாத்தாள் - I** ஆசிரியர்:-ஐ.சங்கர்

➢ 01ஆம் 02ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவிற்கு பிரதியீடாகப் பயன்படுத்தக்கூடிய உருவின் கீழ்க் கோடிடுக.

01) 

1. 


2. 

3. 


02) 

1. 

2. 

3. 

➢ தரப்பட்ட உருக்களை அவதானித்து வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.

A	B	C	D	E	F
					

03) தாவர உண்ணி மிருகமும் ஊன் உண்ணி பறவையும் முறையே,

1. F உம் C 2. B உம் A 3. F உம் E

04) வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளை மட்டும் கொண்டது.

1. A உம் C 2. C உம் D 3. D உம் F

05) கமலம் தனது பிள்ளையை கண்ணும் கருத்துமாக வளர்த்தாள். இதில் "கண்ணும் கருத்துமாக" என்பதன் பொருள்.

1. அன்பாக 2. கண்டிப்பாக 3. மிகக் கவனமாக


➢ **06ஆம் 07ஆம் வினாக்களில் வெற்றுக்கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06) 12 x 4 = ☐ 1. 7 x 6 2. 9 x 5 3. 8 x 6

07) 8 x 12 = ☐ 1. 24 x 4 2. 16 x 5 3. 18 x 6

08) சோபனா மாம்பழத்தையும் தோடம்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் வாழைப்பழத்தை விரும்பவில்லை. வித்தியா வாழைப்பழத்தையும் மாம்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் தோடம்பழத்தை விரும்பவில்லை. செரூபா விளாம்பழத்தையும் மாம்பழத்தையும் விரும்புகின்றாள். எனின் மூவரும் விரும்பும் பழம் எது?

1. தோடம்பழம் 2. மாம்பழம் 3. பலாப்பழம்

09) 

இவ் உருவில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை.

1. 10 2. 14 3. 12

10) கமல் தனது 40வது பிறந்தநாளைக் கொண்டாடும் போது சுமியின் வயது 7 வருடங்களாகும். கமல் 68வது பிறந்தநாளை கொண்டாடும் போது சுமியின் வயது எத்தனை வருடங்களாகும்?

1. 25 வருடங்கள் 2. 23 வருடங்கள் 3. 35 வருடங்கள்

11) 0.25 இற்குச் சமனாக பயன்படுத்தக்கூடியது.

1. $\frac{1}{2}$ 2. $\frac{3}{4}$ 3. $\frac{1}{4}$

➢ **நகரமொன்றில் தபாலகம் அமைந்திருப்பது பாடசாலைக்கு வடக்கே 300m தூரத்திலாகும். பொலிஸ் நிலையம் அமைந்திருப்பது தபாலகத்திற்கு தெற்கே 450m தூரத்திலாகும். மைதானம் அமைந்திருப்பது பொலிஸ் நிலையத்திற்கு கிழக்கே 250m தூரத்திலாகும்.**

12) பொலிஸ் நிலையத்திற்கும் பாடசாலைக்கும் இடையிலான தூரம் எவ்வளவு?

1. 150m 2. 300m 3. 450m


13) பாடசாலையிலிருந்து பொலிஸ்நிலையம் ஊடாக மைதானம் வரையுள்ள தூரம் எவ்வளவு?

1. 350m
2. 400m
3. 250m

14) மைதானத்திற்கு எத்திசையில் பாடசாலை உள்ளது?

1. வடகிழக்கு
2. வடக்கு
3. வடமேற்கு


15) இவ்வுருவுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவு செய்க.



1. A ஆனது தாவர உணவுகளை உண்பவையை மட்டும் குறிக்கின்றது.
2. C ஆனது தாவர மாமிசம் ஆகிய இரண்டையும் குறித்து நிற்கின்றது.
3. B ஆனது விலங்குணவை மட்டும் உண்பதைக் குறிக்கின்றது.

16) குமரன் காலையில் பாடசாலை நோக்கிச் செல்லும் போது அவனது நிழல் வலதுகைப்பக்கமாக விழுந்தது எனின் குமரன் சென்ற திசை.

1. வடக்குத்திசை
2. கிழக்குத்திசை
3. தெற்குத்திசை



17)  நிழற்றப்பட்ட உரு முழு உருவின் பரப்பளவில் என்ன பங்கு?

1. $\frac{1}{3}$
2. $\frac{2}{5}$
3. $\frac{1}{4}$

18) அமீரிலும் பார்க்க சுதாவின் வயது 2 வருடங்கள் அதிகமாகும் சுதாவின் தற்போதைய வயது 24 வருடங்கள் எனின் இன்னும் 4 ஆண்டுகளில் அமீரின் வயது எத்தனை வருடங்களாகும்?

1. 22 வருடங்கள்
2. 26 வருடங்கள்
3. 28 வருடங்கள்

19) இரு சமச்சீர் அச்சுக்களை மட்டும் கொண்ட உரு எது?

1. 
2. 
3. 

20) ஒருமுறை கொண்டு செல்லும் போது 8 பெட்டிகள் வீதம் கொண்டு செல்லும் ஒருவர் 68 பெட்டிகளை கொண்டு செல்வதற்கு எத்தனை தடவைகள் செல்ல வேண்டும்?

1. 8 தடவைகள்
2. 9 தடவைகள்
3. 10 தடவைகள்

➢ கீழ்வரும் தரவினை அடிப்படையாகக் கொண்டு 21ம், 22ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

குறைவு → கூட

கூட ← குறைவு

✱ கணிதம்

△ தமிழ்

○ சுற்றாடல்

வகுப்பறை ஒன்றில் கணிதம், தமிழ், சுற்றாடல் ஆகிய பாடங்களையும் பெற்ற புள்ளிகளின் தன்மையையும் மேற்தரப்பட்ட குறியீடுகளில் பயன்படுத்தி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி

21) நிமால் என்ற மாணவனின் பெறுபேறு ✱ → △ என்று காட்டப்பட்டிருந்தால் அதன் விளக்கம்.

1. கணித பாடத்தில் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளான்.
2. தமிழ் பாடத்தில் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளான்.
3. கணித பாடத்தை விட தமிழ் பாடத்தில் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளான்.

22) அருணன் மூன்று பாடத்திலும் சுற்றாடலுக்கு அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளான். எனின் அவனது பெறுபேறு பற்றிய தவறான குறியீடு

1. ✱ → ○
2. △ → ○
3. ✱ → ○△

➢ **வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

23) பாடகன் பாடலைப் பாடினான். ஓவியன் ஓவியம் வரைந்தான். இங்கு
பாடகன் - ஓவியன் எனின் பாடல் - ……..


1. பாடினான்
2. வரைந்தான்
3. ஓவியம்

24) தாய் சந்தைக்குச் சென்றாள். மகள் பாடம் படித்தாள். இங்கு
தாய் - சென்றாள் எனின் மகள் - ……

1. பாடம்
2. படித்தாள்
3. சந்தை

25) ஓர் நெட்டாண்டு ஒன்றின் முதல் மூன்று மாதங்களிலும் உள்ள மொத்த நாட்களின் எண்ணிக்கை?

1. 90
2. 91
3. 89


26) 

இவ் உருவில் உள்ள ஆகக்கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை?

1. 7
2. 8
3. 9


➢ 27ஆம் 28ஆம் வினாக்களுக்கு தரப்பட்ட எண்கோலங்களை அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

27)



1. 4
2. 6
3. 5

28)



1. 3
2. 6
3. 4

29) காலை 8.45 மணிக்கு ஆரம்பமான பரீட்சை 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள் வரை நடைபெற்று முடிந்தது எனின் பரீட்சை நிறைவடைந்த நேரம் யாது?

1. காலை 9.45
2. காலை 10.00
3. காலை 11.00

30) ஜனவரி மாதம் முதலாவது திங்கட்கிழமை 2ஆம் திகதி எனின் அம்மாதம் இறுதிநாள் என்ன கிழமையாகும்?


1. திங்கட்கிழமை
2. புதன்கிழமை
3. செவ்வாய்க்கிழமை

31) குமாரின் மகன் ரவியின் சகோதரன் எனின், குமார் ரவிக்கு என்ன உறவு முறை?

1. மகன்
2. தந்தை
3. சதோதரன்


➢ **32ஆம் 33ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உரு முகம்பார்க்கும் கண்ணாடியில் தோன்றும் விதத்தை தெரிவு செய்க.**

32)



1.
2.
3.

33)



1.
2.
3.

34) குமரனிடம் ஒரு ரூபாய் நாணயங்களாகவும் ஐந்து ரூபாய் நாணயங்களாவும் ரூபாய் 18.00 உள்ளது. இதில் இருக்கத்தக்க ஒரு ரூபாய் நாணயங்கள் எத்தனை?

1. 2 2. 7 3. 8

35) பெட்டியொன்றினுள் 5 நீலநிற மாபிள்களும், 4 சிவப்பு நிற மாபிள்களும், 3 பச்சைநிற மாபிள்களும் உள்ளன. இதிலிருந்து எடுக்கும் ஒரு மாபிள் நிச்சயம் நீலநிறமாக இருப்பதற்கு பெட்டியிலிருந்து எடுக்கப்பட வேண்டிய மாபிள்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?

1. 5 2. 7 3. 8

36) யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து 30 நிமிடங்களுக்கு ஒருமுறை வவுனியா நோக்கிய பேருந்து சேவை இடம் பெறுகின்றது. காலை 8.40 மணிக்கு ஓர் பேருந்து புறப்பட்டால் அடுத்து பேருந்து புறப்படும் இரு நேரங்களாக அமையக் கூடியது.

1. 9.40, 10.20 2. 9.40, 10.50 3. 9.10, 10.40

➢ **கீழ்வரும் தரவுகளைக் கொண்டு 37ஆம் 38ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

37) ஒரு பென்சிலின் விலை யாது?

1. ரூபா 12.00 2. ரூபா 15.00 3. ரூபா 20.00


38) ஒரு பேனாவின் விலை யாது?

1. ரூபா 15.00 2. ரூபா 20.00 3. ரூபா 25.00





➢ **கீழ்வரும் நெய்யரியை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.**
ஒரு சிறிய கட்டத்தின் நீளம் 5 மீற்றர் இருக்குமாறு இந்நெய்யரி வரையப்பட்டுள்ளது.



39) A இலிருந்து புறப்படும் ஒருவர் C ஊடாக D யை சென்றடைவதற்கு செல்ல வேண்டிய தூரம் யாது?

1. 55 மீற்றர் 2. 45 மீற்றர் 3. 50 மீற்றர்

40) A,B,C,D எனும் புள்ளிகளால் உள்ளடக்கப்படும் பகுதியில் உள்ள கட்டங்கள் எத்தனை?

1. 30 2. 36 3. 25

(40x2.5=100புள்ளிகள்)

www.learneasy.lk இல்

zoom ஊடாக

புலமைப்பரிசில் பரீட்சை 2021

வகுப்புக்கள்

நடைபெறுகின்றன



உங்கள் பதிவுகளுக்கு
இன்றே அழையுங்கள்

76667 4945

தரம்4 (2021)

வகுப்புகள்

நடைபெறுகின்றன



திங்கள் முதல் வெள்ளி வரை

இரவு 7 மணி தொடக்கம் 8 மணிவரை

www.learneasy.lk இல்

தரம் 3

வகுப்புக்கள்

ஆரம்பம்



உங்கள் பதிவுகளுக்கு
இன்றே அழையுங்கள்

76667 4945

புலமைவளரி 5

இலக்கை நோக்கி

நேரம்:- 1.15மணித்தியாலம் | **வளரி – 010** | புள்ளி:-.....

பெயர்:-..... | **வினாத்தாள் - II** | ஆசிரியர்:-ஐ.சங்கர்

01) பின்வரும் பந்தியை நன்கு வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கான விடையை பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

இயற்கை எழில் கொஞ்சும் நகரமே கண்டி மாநகரமாகும். இங்கு ஆண்டுக்கு ஒரு தடவை ஆடி மாதத்தில் எசல பெரஹரா நடைபெறும். தகதக வென மின்னும் தங்கக் கூரையை உடைய தலதாமாளிகை வரலாற்றுச் சிறப்பு மிக்கதொரு பௌத்த விகாரையாகும். இங்கே புத்தரின் புனித தந்தம் வெகு கௌரவமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

1. இயற்கை எழில் கொஞ்சும் நகரம் எது? .....
2. எசல பெரஹரா எந்த மாதத்தில் நடைபெறும்? .....
3. பந்தியில் வந்துள்ள இரட்டை மொழி எது? .....
4. “அழகு” என்பதன் ஒத்தபதம் என்ன? .....
5. “செயற்கை” என்பதன் எதிர்ச்சொல் யாது? .....
6. உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று தருக. .....

(6x1=6புள்ளி)

02) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. மாணவர்கள் டெங்கு நுளம்பை ..... சூழலை சுத்தம் செய்தனர்.

(ஒளிப்பதற்காக , ஒழிப்பதற்காக)

2. பண்டைய மன்னர்கள் ..... மிக்கவர்களாகக் காணப்பட்டனர்.

(மறம் , மரம்)

(2x1=2புள்ளி)

03) பின்வரும் சொற்களில் இரண்டு ஒத்தகருத்து இரண்டு எதிர்க்கருத்துடையவை மீதியாக உள்ள சொல்லைத் தெரிவு செய்க.

1. வையகம், பூமி, வெற்றி, புராதனம், நவீனம்
2. திண்ணம், சுலபம், முரடு, கடினம், உறுதி

(2x1=2புள்ளி)

04) பின்வரும் வாக்கியங்கள் எவ்வகை என்பதை தெரிவு செய்க.

1. கத்தரிக் கோலால் கடதாசியை இருபகுதிகளாக வெட்டுங்கள்.

(அறிவித்தல், கட்டளை, அறிவுறுத்தல்)

2. நீலநிறப் பந்தை எடுத்து வாருங்கள்.

(அறிவுறுத்தல், கட்டளை, அறிவித்தல்)

(2x1=2புள்ளி)

05) பின்வரும் வாக்கியங்களை எதிர்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. விவசாயிகள் வயற்காட்டில் வேலை செய்கின்றனர்.

.....

2. நான் சுவர்க்கடிகாரத்தில் நேரம் பார்த்தேன்.

.....

(2x1=2புள்ளி)

06) பின்வருவதில் பெயராகவும் வினையாகவும் வரும் சொல் அல்லாதது.

1. அலை, நகை, எடு

2. மரை, உடை, இரை

(2x1=2புள்ளி)

07) பின்வரும் பிராணிகளின் தொனிமரபினை எழுதுக.

1. புறா .....

2. தேவாங்கு .....

(2x1=2புள்ளி)

08) பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

.....

2. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.

.....

(2x2=4புள்ளி)

09) பின்வரும் வாக்கியங்களுக்கு பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

1. ஐயோ என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா
2. பெரியவரே கதிரையில் அமர்ந்து ஓய்வெடுங்கள்

(2x1=2புள்ளி)

10) பின்வரும் ஆங்கில சொற்களுக்குரிய தமிழ் சொற்களை எழுதுக.

1. Bottles ……..... 2. Beach .....

(2x1=2புள்ளி)

11) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் தமிழ் கருத்தினை எழுதுக.

1. Tell your parents ……
2. Let's go home ……

(2x1=2புள்ளி)

12) பின்வரும் உருக்களின் சிங்களச் சொல்லினை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1.  …….
2.  …….

(2x1=2புள்ளி)

13) பின்வரும் சிங்கள வாக்கியங்கள் தமிழில் சொல்லப்படும் விதத்தினை எழுதுக.

1. லமய் செல்லம் கறனவா ……..
2. மம நான்னத? …….

(2x1=2புள்ளி)

14) பின்வரும் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1. வைத்தியசாலை ……..……..
2. படங்கள் ……..……..

(2x1=2புள்ளி)

15) **நேற்று மாலை வேளை கிழக்கு வானம் வண்ணக்கோலம் பூண்டிருந்தது. நானும் தங்கையும் வானவில்லின் அழகை இரசித்தபடி நின்றோம். திடீரென வானத்தில் இருந்து துளித்துளியாக மழை பெய்யத் தொடங்கியது. எனக்கும் தங்கைக்கும் ஒரே சந்தோசம். நாங்கள் ..... எனும் சம்பவத்தை தொடர்ந்து மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்கள் இடம்பெற வேண்டும்.)**

1. .....

.....

2. .....

.....

3. .....

(3X2=6புள்ளி)

- **பின்வரும் வினாக்களுக்கான விடைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

16) 9618 எனும் எண்ணின் எண் பெயரை எழுதுக.

.....


17) 1. XIV எனும் உரோம எண்ணை இந்து அராபிய எண்ணில் எழுதுக.

.....

2. 5000 + 000 + 20 + 0 எனும் எண்ணை சேர்த்து எழுதுக.

.....

18) சரஸ்வதி வித்தியாலயத்தில் 1219 மாணவர்களும் சாஹிரா வித்தயாலயத்தில் 2794 மாணவர்களும் கல்வி கற்கின்றனர். இரு பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மொத்த மாணவர்கள் எத்தனை பேர்?.....

19) 

அருகில் உள்ள திண்மத்தில் A,B ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள தோற்றங்களைப் பெயரிடுக.

A. .....

B. .....

20) ஒரு பேருந்தில் 56 பயணிகள் பயணம் செய்ய முடியும். எனின் 6 பேருந்துகளில் பயணிக்க கூடிய பயணிகளின் எண்ணிக்கை யாது?

.....

21) பாரதி பி.ப 6.15 மணி தொடக்கம் பி.ப 9.00 மணி வரை கல்வி கற்றாள். எனின் அவள் எவ்வளவு நேரம் கல்வி கற்றாள்? .....

22) 2m 250cm நீளம் கொண்ட நாடாவொன்று 5 சமதுண்டுகளாக வெட்டப்பட்டது. எனின் வெட்டப்பட்ட இரு துண்டுகளின் நீளம் எவ்வளவு? .....

23) ஐந்து பென்சில்களின் விலை ரூபாய் 55.00, மூன்று அடிமட்டத்தின் விலை ரூபாய் 45.00 சாருஜன் இரண்டு பென்சில்களையும், ஒரு அடிமட்டத்தையும் வாங்கினான். எனின் அவன் செலுத்த வேண்டிய மொத்த பணம் எவ்வளவு? .....

24) 

படத்தில் தரப்பட்டுள்ள பேனை பென்சிலை விட எவ்வளவு நீளம் கூடியது?

.....

25) பாத்திரம் ஒன்று கொள்ளும் நீரின் அளவு 25***l*** ஆகும். தற்போது அப்பாத்திரத்தில் உள்ள நீரின் அளவு 15***l*** 375***ml*** எனின் அப்பாத்திரம் முற்றாக நிரம்பத் தேவையான நீரின் அளவை ***l,ml*** இல் தருக.

.....

26) ஒரு குவியலில் 35 தேங்காய்கள் வீதம் இரண்டு குவியல்களில் உள்ள தேங்காய்களை 7 பேருக்கு சமமாக பங்கிடும் போது ஒருவர் பெறும் தேங்காய்களின் எண்ணிக்கை?


.....

27) இரண்டு சதுர வடிவங்களையும் நான்கு செவ்வக வடிவங்களையும் கொண்டு உருவாக்கக் கூடிய திண்மத்தின் பெயர் என்ன?

.....

28) அத் திண்மத்தின் விளிம்புகளின் எண்ணிக்கை எத்தனை? .....

- **தரம் 5 வகுப்பில் உள்ள 35 மாணவர்கள் வருகை பற்றிய தரவு தரப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு 29ஆம் 30ஆம் வினாக்களுக்கு விடை தருக.**



29) அதிகமான மாணவர்கள் எவ் வாகனத்தில் பாடசாலைக்கு வருகின்றனர்?

.....

30) மோட்டார் சைக்கிளில் வரும் மாணவர்களின் எண்ணிக்கையை வரைபில் நிழற்றிக் காட்டுக.

(15x2 =30புள்ளி)

❖ **31 – 60 வரையான வினாக்களில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

31) மின் சக்தியை ஒளிச்சக்தியாக மாற்றும் உபகரணம்.
1. மின்மணி 2. மின்குமிழ் 3. மின்னழுத்தி

32) பின்வருவனவற்றுள் கற்பகத்தரு என அழைக்கப்படும் தாவரம்.
1. வேம்பு 2. தென்னை 3. பனை

33) கறையான் அரிக்காத மரம்.
1. இலுப்பை 2. வேம்பு 3. தேக்கு

34) நாம் விரும்பத் தகாத செயல் ஒன்று.
1. கடுமையாகப் பேசுவது 2. விளையாட்டு 3. பொய்சொல்லாமை

35) ஓட்டினுள் புகுந்து பாதுகாப்பு பெறும் பிராணி அல்லாதது.
1. ஆமை 2. அட்டை 3. நத்தை

36) இலங்கைக்கே உரித்தான ஈரூடகவாழி.
1. மரத்தேரை 2. மரநாய் 3. சருகுமான்

37) அவுஸ்ரேலியாவின் தேசிய விலங்கு.
1. யானை 2. பண்டா 3. கங்காரு

38) சர்வதேச நியமப் புத்தகங்களுக்கான குறியீடு.
1. SLDA 2. ISBN 3. ISO

39) ஆவணி மாதத்தில் பூக்கும் தாவரம்.
1. இலுப்பை 2. முருங்கை 3. வாகை

40) தவளை முட்டையிடுவது?
1. நீரில் 2. நிலத்தில் 3. இரண்டிலும்

41) கத்தரி, வெண்டி, தக்காளி போன்றவற்றை அதிகம் சேதப்படுத்தும் பூச்சி.
1. அந்துப்பூச்சி 2. மீலிமூட்டுப்பூச்சி 3. கறையான்

42) எண்ணை, கொழுப்பு அடங்கிய உணவுகளை அதிகம் உண்பதால் ஏற்படக்கூடிய நோய்.
1. நீரிழிவு 2. சீதபேதி 3. உயர்குருதியமுக்கம்

43) ஆங்கிலேயர் இலங்கை முழுவதையும் கைப்பற்றிய ஆண்டு.
1. 1815 2. 1796 3. 1505

44)  உருவில் காணப்படுவது.

1. பழையகற்பாலம் 2. இராவணன்வெட்டு 3. காவற்சிலை

45) பின்வருவதில் இழுத்தல் செயற்பாடுற்கு உதாரணம்.
1. கிணற்றில் கப்பியை பயன்படுத்தி நீர் அள்ளுதல்
2. அலுமாரி ஒன்றை நகர்த்துதல்
3. சில்லு வண்டியினை தள்ளுதல்

46) இரண்டு மாவட்டங்களை தன்னகத்தே கொண்ட மாகாணங்கள் இரண்டு எவை?
1. வடமேல்மாகாணம், கிழக்குமாகாணம்
2. மேல்மாகாணம், மத்தியமாகாணம்
3. வடமத்தியமாகாணம், சப்பிரகமுவமாகாணம்

47) எண்ணை சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம்.
1. லுணுவில 2. சபுகஸ்கந்த 3. அகலவத்தை

48) இலங்கையின் முதலாவது பிரதமரைக் காட்டும் உருவப்படம் எது?

1. 
2. 
3. 

49) சகல சௌபாக்கியங்களையும் கொண்ட தன்னிறைவான இந்நாட்டில் சூரியனும் சந்திரனும் நிலைத்திருக்கும் காலமெல்லாம் தார்மீகத்தை காத்தவராக நாட்டு மக்கள் யாவரும் இருப்பார்களாக இக்கருத்தை வெளிப்படுத்துவது இலங்கையின்.
1. தேசியக்கொடி 2. அரச இலச்சினை 3. தேசியகீதம்

50) வானொலி கேட்பதால் ஏற்படும் பிரதிகூலம்.
1. மிதமிஞ்சிய ஒலி செவிப்பறையில் பாதிப்பை ஏற்படுத்தும்.
2. செவி வழியாக செய்திகளை அறிந்து கொள்ளலாம்.
3. விருப்பமான அலைவரிசைகளை தெரிவு செய்யலாம்.

51) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்.
1. மாலைக்கண் 2. மலட்டுத்தன்மை 3. கண்டக்கழலை

52) இலங்கையில் அமைக்கப் பெற்ற இரண்டாவது சர்வதேச விமான நிலையம்.

1. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்
2. மஹிந்த ராஜபக்ச சர்வதேச விமான நிலையம்
3. பலாலி சர்வதேச விமான நிலையம்

53) கொரோனா தொற்று இருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படும் ஒருவருக்கு செய்யப்படும் பரிசோதனை.
1. P.U.R பரிசோதனை 2. V.C.R பரிசோதனை 3. P.C.R பரிசோதனை

54) "கவனமாகக் கையாளவும்" எனும் கருத்தைத் தரும் குறியீடு எது?
1.  2.  3. 

55) பூக்களின் காம்புகள், இதழ்களின் ஓரங்களைத் தைக்க உதவும் தையல்.
1. சங்கிலித்தையல் 2. நரம்புத்தையல் 3. கம்பளித்தையல்

56) கபடி விளையாட்டில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை.
1. 7 2. 5 3. 11

57) போத்தல், தகரம் போன்ற கழிவுப் பொருள்கள் இடப்படும் குப்பைக்கூடையின் நிறம்.
1. நீலம் 2. பச்சை 3. சிவப்பு

58) முயலிடம் காணப்படும் விசேட திறன்.
1. உடலின் நிறத்தை மாற்றுதல்
2. சிறிய ஒலிகளைக் கேட்டல்
3. கூர்மையான பார்வை

59) தியானப் பயிற்சியின் மூன்றாவது படிநிலை.
1. உடலைத்தளர்த்தல் 2. பிரார்த்தனை 3. திடசித்தம்

60) பின்வருவனவற்றுள் மூலவர்ணங்கள்.
1. சிவப்பு, பச்சை, மஞ்சள் 2. பச்சை, சிவப்பு, நீலம் 3.சிவப்பு, மஞ்சள், நீலம்

(30x1=30புள்ளி)

புலமைவளரி – 010

விடைகள்

வினாத்தாள் - I

01) 2	11) 3	21) 3	31) 2
02) 3	12) 1	22) 3	32) 3
03) 3	13) 2	23) 3	33) 2
04) 3	14) 3	24) 2	34) 3
05) 3	15) 1	25) 2	35) 3
06) 3	16) 3	26) 2	36) 3
07) 1	17) 1	27) 2	37) 2
08) 2	18) 2	28) 3	38) 2
09) 3	19) 3	29) 2	39) 1
10) 3	20) 2	30) 3	40) 1

வினாத்தாள் - II

மொழி

01) 1. கண்டி 2. ஆடி 3. தகதக
4. எழில் 5. இயற்கை 6. புத்தர்

02) 1. ஒழிப்பதற்காக 2. மறம்

03) 1. வெற்றி 2. முரடு

04) 1. கட்டளை 2. கட்டளை

05) 1. விவசாயிகள் வயற்காட்டில் வேலை செய்வார்கள்.
2. நான் சுவர்க்கடிகாரத்தில் நேரம் பார்ப்பேன்.

06) 1. எடு 2. மரை

07) 1. குறுகுறுக்கும் 2. அழும்

08) 1. ஒற்றுமையே பலம் 2. உத்தம நட்பு

09) 1. ஐயோ! என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா?
2. பெரியவரே, கதிரையில் அமர்ந்து ஓய்வெடுங்கள்.

10) 1. போத்தல்கள் 2. கடற்கரை

11) 1. உங்கள் பெற்றோரிடம் சொல்லுங்கள்.
2. வீட்டுக்குச் செல்வோம்.

12) 1. மொனரா 2. வம்ப(ட்)டு

13) 1. பிள்ளைகள் விளையாடுகின்றார்கள்.
2. நான் குளிக்கட்டுமா?

14) 1. Hospital 2. Pictures

15) பொருத்மான விடை

கணிதம்

16) ஒன்பதாயிரத்து அறுநூற்றுப் பதினெட்டு

17) 1. 14 2. 5020

18) 4013 பேர்

19) A. திட்டம் (கிடைத்தோற்றம்)
B. பக்கத்தோற்றம்

20) 336 பயணிகள்

21) 2 மணித்தியாலம் 45 நிமிடங்கள்

22) 180m /1m 80cm

23) ரூபாய். 37.00

24) 1cm

25) 9l 725ml

26) 10 தேங்காய்கள்

27) கனவுரு

28) 12 விளிம்புகள்

29) முச்சக்கர வண்டியில்

30) 11 வரை நிழற்றுக.

சுற்றாடல்

31) 2	41) 2	51) 3
32) 3	42) 3	52) 2
33) 3	43) 1	53) 3
34) 1	44) 1	54) 2
35) 2	45) 1	55) 1
36) 1	46) 3	56) 1
37) 3	47) 2	57) 3
38) 2	48) 3	58) 2
39) 1	49) 2	59) 3
40) 1	50) 1	60) 3